1057

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 FEB 1956
MADRAS
15-2
1057
1-56

Sri Prahlada Varadan, Ahobilam

JL
Q22m211,Nu
N56.152
210725

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம் — பக்கம்

1. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 30
2. ஸ்ரீமந்நாதமுனிவம்சத்தில் பகவானுக்கு ஆதரம் 32
[ஸ்ரீ. உப. வித்வான், வேளியநல்லூர் ஸ்ரீநிவாஸதாதாசார்யஸ்வாமி, காஞ்சீபுரம்.]
3. செய்திகள் 33
4. ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம் 35
[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A. B. L. அட்வோகேட், திருச்சி.]
5. மஹாவீரவைபவம் 37
[ஸ்ரீ. உப. வித்வான், ஸரளகவி, பாஹுர், ராகவாசார்ய ஸ்வாமி, வ்யாகரணத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]
6. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் 40
7. சௌசம் 42
[ஸ்ரீ. உப. ஆயுர்வேதரத்நம், பண்டிட்,
மே. துரைஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, சென்னை.]

—ஃ—

முக்கிய அறிவிப்பு

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ்,
திருவள்ளூர், செங்கல்பட்டு ஜில்லா.

சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவை மேற்கண்ட விலாஸத்திற்கே அனுப்ப வேண்டும். சந்தாதாரர்களின் விலாஸமாறுதல்கள் முதலிய தகவல்களையும் அவ்விலாஸத்திற்கே தெரிவிக்கவேண்டும். நிர்வாஹ ஸம்பந்தமான எல்லாக் கடிதப்போக்குவரத்துகளும் மேலே கண்ட விலாஸத்துடன் நடைபெறவேண்டும். பணம் அனுப்பும்போது உங்கள் **சந்தா நெம்பரையும்,** மணியார்டர் கூபனின் பின்பக்கத்தில் **விலாஸத்தையும் மறவாமல் நன்ருகத்தெரியும்படி எழுதவேண்டும்.**

பத்ரிகையில் ப்ரசுரிக்கவேண்டிய வ்யாஸங்கள் செய்திகள் முதலியவைகள் கீழ் கொடுக்கப்பட்டுள்ள விலாஸத்திற்கு அனுப்பவேண்டும்.

ஸம்பாதகர், "ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா"
ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம், செங்கல்பட்டு ஜில்லா.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 15 } மன்மத ௵ மாசி ௴ { ஸஞ்சிகை 2

'𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥'

210725

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑍋𑌦𑍍𑌭𑍂𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥

𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஆன்மிக வழியில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னதாகவே முன்னேற்ற மடைந்திருந்தது நமது பாரதநாடு. இதுவே நமது நாட்டுக்குப் பெருமை தந்தது. இதுவே அழியாத உண்மை. அதனுல்தான் பெருமை நிலைத்திருந்தது.

மேனுடுகள் ஆன்மீகவழியில் முன்னேற்ற மடையாமல் விஜ்ஞானமுறையில் முன்னேறி வந்தன. ஆகவே அதன் பெருமை நவீன காலத்தில் தோன்றியதும் நிலைத்திருக்காதது மாகும். பல நூற்றுண்டுகளுக்கு முன்னதாகவே இந்நிலையை மேனுட்டுப் பெரியோர்கள் எதிர்பார்த்து வருந்தி எச்சரித்தனர். ஆயினும் ப்ரயோஜனமில்லை.

கண்டதே காட்சி என்ற எண்ணம் தலை தூக்க ஆரம்பித்ததே உலகநாசத்திற்குக்காரண மாயிற்று. இது எளிதில் பாமரர்களை வெல்கிறது. ப்ரத்யக்ஷமே ப்ரமாணமெனக் கருதுகின்றனர் ஸாதாரணமக்கள். இதை எதிர்பார்த்தே நமது முன்னோர்கள் நம்மை எச்சரித்துவந்தனர்.

உலகத்தின் கால அளவை நிர்ணயிக்கும் முறையில் ஏற்பட்ட யுகங்களில் இம்மாதிரியான போக்குகள் மாறும் எனவே நமது முன்னோர்கள் எதிர்பார்த்தனர். அதைத் தடுக்க வேண்டிய முன்னேற்பாடுகளையும் எடுத்து வந்தனர். ஆயினும் வெள்ளப் பெருக்கு அதிகரித்தால் அதை தடைசெய்வது கடினம். அதேபோல் நிலைத்திருக்காத ஸுகங்களில் அதிகம்ஈடுபட ஆரம்பித்தனர் உலகத்தோர்.

இம்மாதிரியான நிலைக்கு அடிப்படைக்காரணம் மனிதனுடைய ஆற்றலின் குறைவும் அறிவுத்திறனில் நம்பிக்கை யின்மையுமே. நேரில் பார்ப்பதிலும் கேட்பதிலும் நம்பிக்கை அதிகமாக விருக்கிறது. அயலார் சொல்வதைக் கேட்பதில் அவ்வளவு நம்பிக்கை ஏற்படுவதில்லை. இதனுல்தான் நவீன உலகில் பிரசாரம் செய்பவர்கள் வெற்றி யடைகிருர்கள். ஒருவனுடைய சொல்வன்மையினுல் பொய்யையும் மெய்போல் தோன்றும்படி செய்ய முடிகிறது. ஆதலால் உண்மையை விளக்குவதிலும் கூட ஓரளவு பிரசாரம் தேவையாகவிருக்கிறது.

ஸமீபத்தில் இதன் உண்மையை நாம் நன்கு அறிய ஸந்தர்ப்பமேற்பட்டது. ஸ்ரீமதழகிய சிங்கர் ஸ்ரீமாலோல வித்வத்ஸதஸ்ஸின் நிமித்தம் மதுராந்தகத்திலெழுந்தருளியிருந்தகாலத்தில் பாமரர்களுக்கும் ஓர் பக்த்யதிசயமேற்பட்டிருந்ததை நாம் நேரில் காண முடிந்தது. ஸாமாந்யகாலங்களில் வைதிகமதத்தில் நம்பிக்கையற்றவர்களும் கூட இந்த ஸமயத்தில் மிகவும் உயர்ந்த பக்தர்களாக மாறினர்.

ஒவ்வொரு நாளும் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்கு நடந்த திருவாராதன க்ரமங்களையும் ஸ்ரீமதழகியசிங்கரின் திவ்ய தேஜஸ்ஸையும் ஸ்ரீமாலோல வித்வத் ஸதஸ் நடந்த ரீதியையும் கண்ட ஸாமாந்ய ஜனங்கள் கூட பக்திபரவசர்களாயினர். ஸதஸ்ஸில் அந்வயிக்க முடியாதவர்கள்கூட ஸதஸ்ஸின் பெருமையை நன்கு உணர்ந்து ஸந்தோஷித்தனர். ஸ்ரீ அஹோபிலமடத்தின் வெளிப்புறங்களில் தங்கியிருந்த

படிப்பில்லாத ஜனங்கள்கூட, ஸதஸ் நடக்கும் முறைகளை மட்டில் கவனித்து பலனை அடைந்தனர். ஸ்ரீமதழகியசிங்கர் வெளியில் எழுந்தருளிய காலங்களில் இவர்கள் நேரில் ஸ்ரீமதழகியசிங்கரை ஸேவித்துஸந்தோஷப்பட்டனர்.

ஓர் மஹானுடைய தேஜஸ் எவ்வளவு தூரம் ஜனங்களை ஆகர்ஷிக்குமென்பதற்கு இதுவே உதாஹரணமாகிறது. இதிலிருந்து நமக்கு ஓர் விஷயம் நன்கு புலனாகிறது. அதாவது தத்காலநிலையில் பக்தியையும், ச்ரத்தையையும் பாமரர்களுக்குப் புகட்டுவதற்கு ஒருவாறு பிரசாரம் அவச்யமாகிறது. பிரசாரத்தினால் பல விதமான ஜனங்களுக்கும் பக்தியைப் புகட்ட முடியும்.

இம்மாதிரியான நிலையை எதிர்பார்த்துத்தான் ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் ஸ்ரீமதஹோபிலமடத்தை ஸ்தாபித்தும், ஸ்ரீமதழகியசிங்கர்கள் க்ராமங்கள் தோறும் ஸஞ்சாரமாகவே எழுந்தருளிக்கொண்டு பக்தர்களை அனுக்ரஹித்துக் கொண்டும், பாமரர்களை பக்தர்களாக்கிக்கொண்டும் வரக்கூடிய ஓர் க்ரமத்தை ஏற்படுத்தியுள்ளார். ஸுமார் 600 வருஷகாலமாக ஸஞ்சாரமாகவே எழுந்தருளியிருந்துவரும் ஸ்ரீமதழகியசிங்கர்கள் பக்தர்களுக்குச் செய்துள்ள உபகாரமளவிட முடியாததாகும்.

அடிக்கடி ஸ்ரீமதழகியசிங்கர்கள் இம்மாதிரி எல்லா விடங்களிலும் ஸஞ்சாரம் செய்துகொண்டுவந்தால் நமதுமக்களின் பக்தி வ்ருத்தியடையுமென்பது நிதர்சனம்.

மதுராந்தகத்தில் ஸ்ரீமதழகியசிங்கர் எழுந்தருளியிருந்து வித்வத் ஸதஸ் நடத்தி ஓர் கோலாஹல உத்ஸவத்தை ஜனங்கள் பார்த்து ஆனந்திக்கும்படி செய்தது அவ்வூர் வாஸிகளின் பாக்யவிசேஷமே. புராணங்களை நிந்திக்கும் சாரார்கூட அதே ஸமயத்தில் கூட்டங்கூடி களித்திருந்தாலுங்கூட அவர்களில் அநேகமாக எல்லோரும் ஸ்ரீமதழகியசிங்கரின் தேஜஸ்ஸைக்கண்டு பரவசர்களானார்கள். ஸ்ரீமதழகியசிங்கரின் பட்டணப்ரவேசம் அதேஸமயத்தில் நடந்தது. இந்த கோலாஹலத்தில் ஊரிலிருந்த அனைவரும் கலந்துகொண்டு உத்ஸாஹமாக விருந்தனர். அடிக்கடி இம்மாதிரியாகவே காட்சிகள் வேண்டுமெனக் கூறினவர்கள் பல்லாயிரக்கணக்கானவர்கள்.

ஒருபுறத்தில் ஆஸ்திகப்ரசாரமும் ஒருபுறத்தில் நாஸ்திகப்ரசாரமும் இருக்குங் காலத்திலுங்கூட ஆஸ்திக்யத்திற்கு எவ்வளவு மதிப்பு இருக்கிறது என்றும் நன்கு நமக்குப் புலனாயிற்று. உண்மையான மதிப்பு ஆஸ்திக்யத்திற்கு இன்னும் இருந்துதான் வருகிறது, குறையவில்லை. ஆனால் ஜனங்களுக்குத்தானாக அறிந்து அநுபவிக்கக்கூடிய சக்தி குறைந்து இருக்கிறது. அதுக்கு தத்கால சூழ்நிலைதான் காரணம். ஆகவே இந்தச்சூழ்நிலையை மாற்றி தகுந்த சூழ்நிலையை நாம் ஏற்படுத்தினால் பாமரர்களையும் பக்தர்களாக்கிவிடமுடியுமென்பது மறுக்கமுடியாத உண்மையாகிறது.

ஸ்ரீமாலோல வித்வத்ஸதஸ்ஸில் வித்வான்கள் அந்வயித்துக்கொண்டு நற்பலனை யடைந்தனரென்பது ஒருபுறமிருக்க, பாமரர்கள் பலர் வைதிகமதத்தில் பற்றுதல் கொள்வதுடன் பக்தர்களானார்களென்பது ஓர் பெரிய விஷயமாகிறது. இம்மாதிரியே நாடு முழுவதிலும் ஓர் பக்திப் பெருக்கு ஏற்படுவதற்கு ஸ்ரீமாலோலனும் ஸ்ரீமதழகியசிங்கரும் காரணபூதர்களாக இருந்து அநுக்ரஹித்தருளவேணும்.

ஸ்ரீ:

ஸ்ரீமந்நாதமுனிவம்சத்தில் பகவானுக்கு ஆதரம்

சிக்கெனச் சிறிதோரிடம் புலப்படாத் தன்னுள்ளே யுலகுக
ளொக்கவே விழுங்கிப் புகுந்தான் புகுந்ததற்பின்
மிக்க ஞானவெள்ளச் சுடர் விளக்காய்த் துளக்கற்ற முதமாயெங்கும்
பக்கநோக்கறியானென் பைந்தாமரைக் கண்ணனே.

[திருவாய்மொழி 2-6-2]

இதற்கு 'இரண்டாம் பாட்டில்' சிக்கெனப் பிடித்தேன் என்ற பின்பு உஜ்வலரூபனாய் ச்ருதநியதத்ருக்காய் அநந்யபரனுமானானென்கிறார். 'சிக்கெனவித்யாதி' என்று பதினெண்ணாயிரப்படியில் அவதாரிகை. இதற்கு இருபத்திநாலாயிரப்படியில்சப்தார்த்தம்இவ்வாறு. 'என் பைந்தாமரைக் கண்ணன் 'மதீயனான சீதளதாமரஸாக்ஷன்' பைந்தாமரை— பச்சையான தாமரை, சீதளமான தாமரை என்றபடி. சிறிது— அத்யல்பமான, ஓரிடமும்— ஒரு பதார்த்தமும், புறப்படா— பஹிர்பூதமாகாதபடி, தன்னுள்ளே— ஸ்வஸங்கல்பத்திலே, உலகுகள்— லோகங்களை, ஒக்கவே— அக்காலத்திலே தானே, விழுங்கி- கபளீகரித்து, அடக்கியென்றபடி. நாம் ஆழ்வாரையநுபவிக்கும்பொழுது செருப்பு வைத்துத் திருவடி தொழப்புக்காப்போலேயாகவெண்ணாதென்று பார்த்து அவச்யகர்த்தவ்ய லோக வ்யாபாரங்களை யெல்லாம் தீர்த்துக் கொண்டென்றபடி. சிக்கென— காடமாக, புகுந்தான்—என்னுள்ளேயிதி சேஷ: புகுந்ததற்பின்— புகுந்தவநந்தரம், மிக்க ஞான வெள்ள— அதிசயிதஞாநப்ரவாஹமாகிற, சுடர்— ப்ரபைக்கு, விளக்காய்— ப்ரதீபமாய், அதிசயிதஞாநாச்ரயனுமாய், ஞாநஸ்வரூபனுமாய், என்றபடி. துளக்கற்று— கம்பரஹிதனாய், துளக்கு கம்பம், அமுதமாய்- அமிர்தமாய், தான் மத்ஸம்ச்லேஷமுதிதனானவாகாரத்தாலே எனக்கு போக்யனாயென்றபடி. எங்கும்— ஓரிடத்திலும், பக்க நோக்கு- பரிசரத்தைப்பார்க்க, அறியான்— சக்தனாகிறிலன்.

இப்பாட்டிலிருக்கும் எங்கும் பக்கநோக்கறியான் என்பதின் அர்த்தம், ஆச்ரித ஜநத்தை விட்டு, அந்யத்ர கண் வைக்கமாட்டாமையாலும், என்றர்த்தமுள்ளதும், ஸ்ரீ த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி 28— வது ச்லோகத்திலிருப்பதுமான 'ச்ரிதநியதத்ருசே:' என்கிற ஸூக்தியால் சொல்லப்பட்டது. செருப்பு வைத்துத் திருவடித் தொழும் விஷயம் வேறு வியாக்யானங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் செருப்பு வைத்துத் திருவடித் தொழுகையாவது— ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் பெருமாளைத் திருவடித் தொழ எழுந்தருள அவர் ஸ்ரீ பாதம் பித்தப் பிளப்பாயிருக்கையாலே ஸ்ரீ பாதரக்ஷை கொண்டு எழுந்தருளினாராய், அதைத்திருவாசலிலே வைத்து எழுந்தருளினவளவிலே ஸ்ரீ பாதரக்ஷையிலே தானே திருவுள்ளம் சென்று 'தீர்த்தம் ப்ரசாதிக்க' என்று அருளிச் செயகிறதை 'செருப்புப் ப்ரசாதிக்க' என்றாராம். அத்தைச் சொல்லுகிறதெ' ன்று டிப்பணி இருக்கிறது. இவ்விடத்தில் ஸம்ஸ்க்ருத வ்யாக்யானமான ஒன்பதினாயிரப்படியில் எங்கும் பக்கநோக்கறியான் என்பதற்கு 'எல்லா காலத்திலும் பக்கத்திலிருக்கும் ஸ்ரீ பூமி தேவிகளையும், என்னிடத்திலிருக்கும் ஸ்நேகத்திற்குப் பரவசனாயிருப்பதால் பார்ப்பதற்கு ஸமர்த்தனாகமாட்டான் என்றர்த்தம்' என்றும் 'இவ்விடத்தில் இந்தக் கதையை உதாஹரிக்கிறார்கள்:— ஸ்ரீ குருகைக் காவலப்பன் ஸந்நிதியில் ரஹஸ்ய விசேஷங்களைக் கேட்கவேண்டுமென்று ஸ்ரீ மணக்கால்நம்பி முகத்திலிருந்து கேட்டு வந்த பகவானை யாமுநமுனி ஓரிடத்தில் சமாதியிலிருக்கும் அவரைப் பார்த்து

சமாதி குலையும் என்ற பயத்தால் சப்தமில்லாமல் பின்புறத்தில் உட்கார்ந்திருந்தபொழுது தனக்கு அபிமுகமாயிருப்பவரும் கண்ணை வேறிடத்தில் செலுத்துபவருமான பகவானைப் பார்த்து அந்த குறுகைக்காவலப்பன் இதென்னவாச்சரியம் என்னிடத்தில் கண்ணைச் செலுத்தினவரும் எனக்கபிமுகமாயுமிருக்கிற பகவான் ஆலிங்கனம் பண்ணும் லக்ஷ்மியைக்கூட பார்க்கவில்லை. அப்பேர்க்கொத்த பகவான் என்னிடத்தில் கண்ணை வைக்காமல் அடிக்கடி பக்கம் பார்க்கிறான். இது என்ன காரணம் என்று நன்கு ஆலோசித்து என்னைக் காட்டிலும் ஆதரிக்கக்கூடிய ஸ்ரீ நாதமுனி வம்சத்தில் (சொட்டைக் குலத்தில்) அவதரித்த ஒருவர் நிச்சயமாக இங்கே வந்திருக்கிறார். இதனாலே அந்த பகவான் என்னையனாதரித்து அவரைப் பார்ப்பதில் குதூகலமுள்ளவனாயிருக்கிறான் என்று நிச்சயித்து இந்த இடத்தில் ஸ்ரீ மந்நாதமுனி வம்சத்தில் அவதரித்த ஒருவர் வந்திருக்கிறாரா? என்று தூரத்திலிருக்கும் ஜனங்களைக் கூப்பிட்டுக் கேட்டார். அதே க்ஷணத்தில் பகவானான யாமுநமுனியும் அருகில் சென்று நமஸ்கரித்து அபிவாதனம் செய்து தாஸனான நான் வந்திருக்கிறேன், சமாதி குலையும் என்கிற பயத்தால் தூரத்தில் சப்தமில்லாமல் பின்புறத்தில் உட்கார்ந்திருந்தேன். பகவானாலே எப்படி இவ்விஷயம் அறியப்பட்டது என்று சொன்னார். இவ்விதம் யாமுநமுனிகளால் சொல்லப்பட்ட குறுகாதீசகுரு என்னிடத்தில் கண்ணை செலுத்தின பகவானுக்கு எப்பொழுதும் முன் பார்க்கப்படாத பக்கப் பார்வையைப் பார்த்து என்னைக் காட்டிலும் ஆதரிக்கத்தகுந்த ஸ்ரீ மந்நாதமுனி வம்சத்தில் அவதரித்தவருடைய வரவு இல்லாதுபோனால் பக்கப்பார்வை உபபந்நமாகாது என்று நிச்சயித்து நான் இவ்விதம் சொன்னேன் என்று சொன்னாரென்று ப்ரஸித்தி' என்றும் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. பகவானுக்கு தன் பத்நி பரிஜனாதிகளிடம் இருக்கும் ஆதரத்தைக் காட்டிலும் தன் பக்தர்களிடத்தில் அதிக ஆதரம், அவர்களைக் காட்டிலும் ஸ்ரீமந்நாதமுனி வம்சத்தில் அவதரித்தவர்களிடத்தில் ஆதராதிசயம் என்கிற இவ்விஷயம் இப்பாட்டின் வேறு சில வ்யாக்நங்களிலும் குருபரம்பராப்ரபாவத்திலிருக்கும் ஆளவந்தார் ப்ரபாவத்திலும் ஸ்பஷ்டமாயிருக்கிறது.

—:0:—

ஸ்ரீ:

செய்திகள்

மதுராந்தகத்தில் ஸ்ரீமதழகியசிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

ஸ்ரீமதஹோபிலமடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீ ரங்கசடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம், இவ்வூர் ஸம்ஸ்க்ருத கலாசாலையில் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.

ஸ்ரீ மாலோல வித்வத் ஸதஸ் இவ்வூரில் நடந்து அன்றையதினம் ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ வீரராகவசடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் திவ்யாநுக்ரஹத்தால், விசேஷ சாற்றுமுறை கோஷ்டியும், ஓர் பெரிய ததீயாராதனமும் நடந்தேறியது. நூற்றுக் கணக்கான பக்தர்கள் கூடியிருந்து அந்வயித்தனர்.

அன்று ஸாயங்காலம் திருநக்ஷத்ரத்திற்குரிய ஸ்ரீ மதழகியசிங்கரின் திருவுருவப்படங்கள் நன்கு அலங்கரிக்கப்பட்ட இரு யானைகளின் பேரில் அலங்கரிக்கப்பட்டு, சத்ர சாமராதிகளுடன், மேளவாத்யங்களுடனும், வேத பாராயணம், ஸ்தோத்ரபாட கோஷ்டி இவைகளுடனும் வீதிவலம் வந்து கலாசாலை ப்ரார்த்தனா மண்டபத்தை அடைந்தன.

அங்கு ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீ கார்யம் வித்வான் ஜோஸ்யம் ஸ்ரீ. உப. ரங்காசார்ய ஸ்வாமி ஸ்ரீமதழகியசிங்ரின் திவ்ய கல்

யாண குணங்களைக் குறித்து நன்கு உபந்ய ஸித்து எல்லோரையும் ஆனந்தத்தில் மூழ்க்கி ஞர்.

பிறகு வந்தனோபசாரம் கூறப்பட்டு, சந்த னம், வெற்றிலை பாக்கு, சர்க்கரை விநியோகத் துடன் உத்ஸவம் இனிது நிறைவேறியது. இவ்வருஷ திருநக்ஷத்திரம்போல் இதுவரை இவ்வளவு விமரிசையாக நடந்ததே இல்லை. ஸ்ரீமதழகியசிங்கரே நேரில் எழுந்தருளியி ருந்து திருநக்ஷத்திர மஹோத்ஸவத்தை கலா சாலையில் நடத்த அநுக்ரஹித்தருளிய வருஷ மல்லவா?

*　　*　　*　　*　　*

ஸ்ரீமதழகியசிங்கர் நமது கலாசாலையில் ஞா யிற்றுக்கிழமை (12-2-56) அன்று எழுந்தரு ளியிருந்து ஸ்ரீ ந்ருஸிம்ஹனுக்கு திருவாராத னங்கள் கண்டருளினர்.

ப்ரார்த்தன மண்டபத்தில் ஸ்ரீ மாலோலன் வெள்ளி மண்டபத்தில் எழுந்தருளியிருந்தார். அன்றைய திருவாராதனம் அங்கே நடந்தது. திருவாராதனம் நடந்த பின்னர், ஸமாச்ரய ணம், பரந்யாஸம் இவைகள் நடந்தன.

அதன் பின் ஸ்ரீமதழகியசிங்கர் கலாசாலா மாணவர்களை நேரில் கடாக்ஷித்து, ஸ்தோத்ர பாடங்களைக் கேட்டு உகந்தாயிற்று. பிறகு வித்யார்த்திகள் அனைவருக்கும் பாரிதோஷிக மும், பலமந்த்ராக்ஷதையும் அநுக்ரஹித்தா யிற்று. ஸ்ரீமதழகியசிங்கருக்கு ஸம்ஸ்க்ருதத் திலும் தமிழ் மொழியிலும் ஸ்வாகத பத்ரிகை கள் ஆசிரியர்களின் சார்பில் ஸ்ரீ அத்யக்ஷரால் வாசித்து ஸமர்ப்பிக்கப்பட்டன. ஸ்ரீமதழகி யசிங்கரும் உகந்தாயிற்று.

நமது கலாசாலைச் சரித்திரத்தில் இது பொன்னால் பொறிக்க வேண்டிய ஓர் முக்கிய நிகழ்ச்சியாகும். ஸ்ரீமதழகியசிங்கரின் அநுக் ரஹ விசேஷத்தினால் மேன்மேலும் இக்கலா சாலை வ்ருத்தி அடையுமென்பது நிச்சயம்.

டி. ராமஸ்வாமி ஐயங்கார், அத்யக்ஷர்,
ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.

ஸ்ரீபுத்தங்கோட்டகம் ஸ்வாமியின் வருஷாப்திகம்

ஸ்ரீமத்வேதமார்க்கப்ரதிஷ்டாபநாசார்ய ராய் ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தாந வித்வா ஞய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ. உப. வே. புத் தங்கோட்டகம் ஸ்ரீ நிவாஸாசார்ய ஸ்வாமியின் ப்ரதம வருஷ கைங்கர்யம் ஸ்வாமியின் திருமா ளிகையில் உபயவேத க்ரந்த சதுஷ்டய இதி ஹாஸ புராணுதி பாராயணங்களுடன் அதி விமர்சையாக தை மீ 6 உ வியாழக்கிழமை உபக்ரமிக்கப்பட்டு தை மீ 15 உ வரை பத்து தினங்கள் நடைபெற்றன. அங்வயித்துள்ள ஸ்வாமிகளுக்கு ஸகல ஸௌகர்யங்களும் செய் யப்பட்டு 16 உ ஞாயிற்றுக் கிழமை ததீயாரா தனம் விசேஷமாக நடத்தி யதோசிதம் ஸம்பாவனையும் செய்யப்பட்டது. அன்றைய தினம் மதுராந்தகம் ஸ்ரீ. உப, வீரராகவாச்சா ரியார் ஸ்வாமி ஸ்ரீஸ்வாமியின் தினசரியையும் கல்யாண குணங்களையும் பற்றி நன்றாக உபந்ய ஸித்தார். கைங்கர்யத்தை ஸ்வாமியின் தௌ ஹித்ரன் சி. வாஸுதேவாசார்யன் மிக்க பக்தி ச்ரத்தையுடன் நன்றாக நடத்தினன்.

எமப்பூர் ராமஸ்வாமி.

—ஃ—

ஓர் விஜ்ஞாபனம்

அச்சுயந்த்ரத்தில் ஏற்பட்ட எதிர்பாராத சில அஸௌகர்யத்தினல் இம்மாத ஸஞ்சிகை இரண்டு பாரங்களுடன் வெளியாகி இருக்கிறது. அடுத்த ஸஞ்சிகைகளில் குறைந்த பாரங்களை சேர்த்து வெளியிடப்படும். இதை நமது பத்ரிகையின் வாசகமஹா சயர்கள் பொறுத்துக்கொள்ளவேணுமென்று ப்ரார்த்திக்கப்படுகிறார்கள்.

ஸ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

இப்பொழுது (பகவத் தயாகடாக்ஷ ஸங்கல்பங்களுக்கு லக்ஷ்யமான பிறகு) அந்த ஒரு தத்வத்தையே, ஏகம் அநாக்ஷ்ய- மற்றொன்றையும் நோக்காமல் அநுபவித்து, ரஸாதிஶயாத்- நிரதிசயமான இன்ப பாரவச்யத்தால் ஸ்வீயம் மந:- முன் அப்படி வெளியே விஷம ஸஞ்சாரம் செய்த என் மனதே, (இன்ன அவஸ்தையில்தானிருக்கிறதென்று எனக்குச் சொல்லத் தெரியவில்லை) ஸ்வபிதி வா- தூங்குகிறதென்று சொல்வதோ, அவஶம்வதி- இன்பமதத்தால் தலை கால் தெரியாமல் இருக்கிறதென்று சொல்வதோ, மூர்ச்சதி வா- மூர்ச்சித்துப் போய் நிர்வ்யாபாரமாயிருக்கிறதோ, வேற்றுமை என்பதுஸ்புரிக்காமலிருப்பதற்குக் காரணம் பரமாத்மாவினனுபவத்தாலுண்டான நிரதிசயாநந்த பாரவச்யமென்று, 'ரஸாதிஶயாத்' என்பதால் காட்டப்படுகிறது. அஹோ என்ன அத்புதம். மனம் தூங்கி நிர்வ்யாபாரமாயிருப்பதை, அஜ்ஞாநத்தினுல் தூக்கத்தில் அக்காலத்தில் அறிந்து தெரிந்து கொள்ளவில்லை. இப்பொழுது ஸமாதியில் மனது நிர்வ்யாபாரமாயிருப்பது மட்டும் தெரியவருகிறது போலும். முன்பு தூக்கத்தில் இப்படிப் பேச இடமில்லை. அப்பொழுதும் பரமாத்ம பரிஷ்வங்கமும் மனதின் லயமும் உண்டு. இது விஷயத்தில் ஒன்றும் துணிந்து 'இதமித்தம்' என்று சொல்ல முடியவில்லை. இன்னுமோர் அத்புதத்தையு மநுபவிக்கிறேன்.

அந்யேஷாமஜஹத்த்ரிவர்க³மநஸாம்
ஆயு:க்ஷயத்ராஸவத்ஸு
அப்ரத்யூஹமதிக்ரமைரவிதத
வ்யாபாரயந்த்ரஸ்ய மே ।
ஹ்ரஸ்வீபூ⁴தவதீஷு ப்ரவ்ருத்³த⁴வ்ருஜிநா
அபாரவாரீநிதே⁴:
ப்ரத்யாஸீத³ந்தி தீரவாஸரா இதி
ப்ரீதி: ப்ரதிஷ்டா²ப்யதே ॥

அஜஹத்த்ரிவர்க³மநஸாம்- தர்மார்த்த காமங்களை விட மனமில்லாத, அந்யேஷாம்- பிறருக்கு ஆயு: க்ஷயத்ராஸவத்ஸு- ஆயுஸ் கழிந்துபோய் விட்டதே இன்னும் கொஞ்சம் தானே இருக்கிறதென்று பயத்தைத் தருவதான, ஹ்ரஸ்வீபூ⁴தவதீஷு-கழிந்தநாள்களைக் குறித்து, அப்ரத்யூஹமதிக்ரமை:- கெடுதலையில்லாத சாஸ்த்ரீய நிவ்ருத்தி மார்க்க தர்மங்களால், அவிதத வ்யாபார யந்த்ரஸ்ய மே பழுதேயில்லாமல் நற்பொழுது போக்கும் பாக்யம் பெற்ற எனக்கு, ப்ரவ்ருத்³த⁴ வ்ருஜிநா அபார வாரீநிதே⁴- மிகப் பெருக்கப்பட்ட தீவினைக் கடலுக்கு அப்பால் கரையாகும், தீரவாஸரா:- தேஹத்தை விடும் மோக்ஷப் பகல் தினம், ப்ரத்யாஸீத³ந்தி இதி- நெருங்குகிறதே என்று, ப்ரீதி:- ஸந்தோஷம், ப்ரதிஷ்டா²ப்யதே- மனதில் நிலையாயிருக்கும்படி செய்யப்படுகிறது. 'கூவிக் கொள்ளும் காலம் குறுகாதோ' 'க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும் ப்ரியமிவாதிதி²ம்' முதலியவற்றை நினைக்கவேணும். ஸங்கல்பஸூர்யன் உதித்து தேஹத்தையும் ஸம்ஸாரத்தையும் விடுகையில் இவருக்கு மோக்ஷநித்யப் பகல். இதுவும் மிகவும் ஸந்தோஷத்திற்குக் காரணம்.

உதா³ரஸுஹ்ருதோ³ தை³வஸ்ய திஷ்ட்²யா நு
நிஷ்காரதீ³விகா
நிவர்திதநிஜாவதாரஸ்தா²
உதீர்ணவிதந்த்ரஸாரஸ: ।
யஸ்மிந்நிஹதஸ்வஸ்திஷு கா...
ஸ ஜநவ ஶதாயிகாம்

210725

சுகூ்ரதகஃ வாரவூஹ்ரா நாயுடிம்
வூவெஶயதி வூஹா: ॥

அநாதிகாலமாய் பகவான் தேஹத்திற்குள் ஹ்ருதயமெனும் சிறு குஹைக்குள் இருந்து வந்து நம்மை பல 101- நாடிகளில் கலந்த ஒன்ருகிய ப்ரஹ்ம நாடியில் நிர்யாண காலத்தில் ப்ரவேசிப்பித்து நித்யமான ஸ்ரீ வைகுண்ட நகரத்திற்கு நம் ப்ரயாணத்தைச் செய்விக்கிருர். அவர் நாமறியாமலேயே தம் புத்ரவாத்ஸல்யத்தால் நம்மைக் கரையேற்ற ஆனைப்பாடு பட்டு வருகிருர். அவருடைய கருணைக்களவே இல்லை. உஹாரகூஹரெ — ஹ்ருதயமெனும் சிறு குழியில் (இருட்டோடையில்) ‹சுஜெ: கூஜெவாரிஷம் வஹிரம் வஹவ்ஸூஹ்ஷம்' என்றபடி களேபரமென்று பெயருடைய சரீரத்திற்குள் உள்ள மிகவும் நுட்பமான ஹ்ருதய ஸுஷிரே, (பொத்தலுக்குள்) ஷெவ:— இருட்டடைந்த மிக நுட்பமான ஒட்டையில் ‹சுஹிவாகஶீதி' என்று ச்ருதி காட்டியபடி ஜ்வலித்துக்கொண்டு ‹ஃவ்ரதிஷடாநகஃடா' என்று ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் பட்டர் ஸாதித்தபடி இவனுக்கு நித்ரா காலங்களில் பரிஷ்வங்கத்தையும் பிறகு சாச்வத மோக்ஷத்தையும் வழங்கும் வள்ளலாக அங்கு நித்ய வாஸம் செய்கிருர். திஷ்நு — நின்றுகொண்டே யிருக்கிருர். தம் திருநகருக்கு அழைத்துக்கொண்டு போகவேணுமென்ற ப்ரயாணக் கோலமாகவே நிற்கிருர். ‹ய ஸூத்நி திஷ்நு' என்கிற அந்தர்யாமி ச்ருதியின் ஸூசநம். நிஷஉரஃவிடிகா — நீண்ட சாக்கடைக் குழி, ‹ஸாவநாஃவடிகாயாம்' என்றபடி நம் நீண்ட த்யாநதாரையில் பகவான் ஹம்ஸாக ரமிக்க வேணும். சாக்கடை ஜலதாரை தீர்க்க காலமாய் சுத்தம் செய்யப்படாமலே மேன்மேலும் கச்மலங்கள் விழுந்து பெருகிக்கொண்டேயிருப்பது. நிவதித — நீண்டசாக்கடைக்குள் மேலேயிருந்து விழுந்துவிட்ட, நிஜாவதர் — தம் குழந்தையை, (ஆண் பெண் பேதமில்லை) ஸூஷிதா— தூக்குவதற்காகவே, ‹சுஹம் வஸூதேபரிதவ்யஸம்ஸாரஸாகராக', சுவதீணடி— குதித்திரங்கியிருக்கும், ‹ஹாஃடி சுவதாரம்' என்பதையும் ‹அவதீர்ண' சப்தம் ஸூசிப்பது. விதரகூ்ராகஃ— தகப்பன் தாய்களைப்போலே, இருவரும் சேர்ந்தே அவதீர்ணர், ‹சுநெ்ரஷு வாவதாரெஷு விஷ்ணோ: ஸ்ரீரநவாயிநீ' அந்தர்யாம்யவதாரங்களிலும் அப்படியே. ‹ஸ்ரூஜயா ஷெவொ ஷெவகூஹ்ஶூநெதெ' இவளோடே கூடியவரே தேவன். பர்த்தாவையும் விட்டுப் பிரியாள். குழந்தையையும் விட்டுப்பிரியாள். இவன் நினையாவிடினும் இவன் நெஞ்சிலிலேயே இருவரும் சேர்ந்து வஸிப்பது. தஷூிநாஜெ — அந்த ஸங்கடமான ப்ராணுத்யயகாலத்தில், ஷவேவ— அந்த தேவனே, நம்முடைய ஸஹகாரமுமறிதலுமில்லாமலேயே, ‹ஶதாயிகாம் யஃநிம் — 101 நாடிகளில், ஸம்ஸாரமண்டலத்திற்குள்ளேயே பல திக்குகள் செல்வதற்கு த்வாரங்களான 100 நாடிகளைத் தள்ளி மேலே கிளம்பி அம்ருதத்வமெனும் மோக்ஷத்தைச் சேர்ப்பிக்கும் த்வாரமான ஸுஷும்நா எனும் ப்ரஹ்மநாடிக்குள், சுகூ்ரதகஃவாரவூஹ்ரா நாயுடிம் - ‹ப்ரஹ்மபுர'மென்று பெயருடைய, க்ருதகபுர தேஹத்திலிருந்தும் ஸ்வர்க்க ஸத்யலோகாதி க்ருதகபுரங்கள்போலல்லாத நித்யமோக்ஷநகரத்திற்கு ப்ரயாணத்திற்காக, வூஹா:— அந்த நித்யபுரத்திற்குப்ப்ரபுவே, இப்படி இத்தனை நாடிகள் நடுவில் ப்ரஹ்மநாடியையறிந்து நுழைவிக்கும் ஸாமர்த்யமுடைய ப்ரபு, வூவெஶயதி— நுழைவிக்கிருர். ‹சுயூ்ாதூயொவெநெ ஷெவஜகூா யீரொ ஹஷிடி ஶொகூள ஜஹாதி' என்ற கடவல்லி முதலில் கூறியதேவன், அந்த உபநிஷத்துமுடிவில் ‹ஶதஞ்செகா வ ஹரூதயஸ்ய நாஃஃ:' என்று 101-வது நாடி வழியாக ப்ரஹ்ம ப்ராப்தியை வர்ணித்தது. ஆரம்பத்திலுள்ள தேவ சப்தத்தையும் முடிவில் 101- வது நாடி விஷயமான மந்த்ரத்தையும் இங்கே நினைக்கிறது. இந்த ச்லோகம் நிர்யாணுதிகாரத்தின் முடிவு ச்லோகம்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த

மஹாவீர வைபவம்

(சென்றஸஞ்சிகையின் தொடர்ச்சி)

களோடு ஆலோசனை செய்து ப்ரகடனம் செய்து விட்டார். இதையறிந்த மக்கள் தம் தம் வீதிகளையும், வீடுகளையும், நேர்த்தியாக அலங்கரிக்கத் தொடங்கினர். விஷயமறிந்த மந்தரையென்ற கூனி கைகேசினிடம் சென்று நாளையதினம் கௌஸல்யை மகன் ராமனுக்கு யுவராஜபதவிக்காக ஏற்பாடு பலமாக நடக்கும்போது நீ மூடமதியாக இருந்து தூங்குகின்றாயே. தன் மகன் யுவராஜபதவி ஏற்பதால் கௌஸல்யைக்கன்றோ பெருங்கௌரவமும் மதிப்புமுண்டு. நீ அவளுக்கு அடிமைபோலன்றோ வாழவேண்டிவருமென்பது போன்ற பல வார்த்தைகள் பேசி கைகேசியின் மனதைக் குழப்பி விட்டாள். உடனே கலக்கமுற்ற கைகேயியும் இன்றே இவ்விடமிருந்து ராமனைக் காடு போகச் செய்கின்றேன். யுவராஜ பட்டாபிஷேகம் பரதனுக்கு நடத்தும்படியும் ஏற்பாடு செய்கின்றேன் என்று ப்ரதிஜ்ஞை செய்து கொண்டாள். பிறகு தன்னிடம் வந்த தன் பர்த்தாவான தசரதசக்ரவர்த்தியிடம் 'தாங்கள் முன்பு தேவாஸுர யுத்தத்தின்போது வாக்களித்த இருவரங்களையும் இப்போதே எனக்களிக்கவேண்டும். அவற்றுள் முதல் வரம் ராமனுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள யுவராஜ பட்டாபிஷேகம் பரதனுக்குச் செய்ய வேண்டும் என்பது. இரண்டாவது வரம் தண்டகாரண்யத்தில் 14 வருஷங்கள் மரவுரி, ஜடை, மான்தோல் தரித்து ஸ்ரீ ராமன் தண்டகாவனத்தில் வாஸம் செய்யவேண்டுமென்பது. என்று இரு வரங்களையும் இப்போதே பூர்த்தி செய்யவேண்டுமெனக் கேட்டுக் கொண்டாள். மேலும் ஸத்தியத்தின் பெருமையைச் சொல்லி ஸத்தியத்தைக் காப்பதற்காகவும் தாங்கள் இப்போதே ராமனை முனிதர்மம் ஏற்கும்படிச் செய்யவேண்டுமென்றும் அப்படிச் செய்யாவிடில் உமதெதிரிலேயே ப்ராணத்தியாகம் செய்து விடுவேனென்றும் கூறி சக்ரவர்த்தியை நிர்பந்தித்தாள். இதைக் கேட்டவுடன் சக்ரவர்த்தியும் பதறி என்ன செய்யவேண்டுமென்பதையுமறியாது தவிக்க, கைகேசி தானே ஸ்ரீ ராமபத்ரனை வரவழைத்து கீழ் கண்டவாறு கூறினாள். 'ராகவ! உனக்காக ஏற்பாடுசெய்யப்பட்ட யுவராஜ பட்டாபிஷேகம் பரதனுக்குச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆகையால் நீ பட்டாபிஷேகத்தைவிட்டுத் தவவேடம்பூண்டு 14 வருஷங்கள் தண்டகாவனத்திலிருக்கவேண்டும். என்று கட்டளையிட்டாள். இதைக் கேட்டவுடன் ஸ்ரீ ராமபத்ரன் இது தன் பிதாவின் கட்டளையே என்று ஏற்றுக் கொண்டு மிக்க சீக்கிரத்தில் நான் இங்கிருந்து தண்டகாவனம் செல்ல விழைகிறேன் என்று மகிழ்ச்சியுடன் கூறி யௌவராஜ்யபதவியைத் துறந்து மனைவியுடனும் இலக்குமணனோடும் தண்டகாவனம் சென்று நற்குணமுள்ள புத்திரன், எப்படிப்பட்டதாயினும் குருவாக்யத்தையநுஷ்டிக்க வேண்டியவனே, என்ற பரமதர்மத்தை ஸ்தாபனம் செய்தருளினான் என்பதை 'அந்ருத' என்று தொடங்கும் சூர்ணிகையினால் நம் ஸ்வாமி கூறுகிறார்.

अनृतभयमुषितहृदयपितृवचनपालनप्रतिज्ञावज्ञातयौवराज्य!

அந்ருதபயமுஷிதஹ்ருதயபித்ருவசநபாலநப்ரதிஜ்ஞாவஜ்ஞாதயௌவராஜ்ய!

அந்ருத- அஸத்யமூலமான, பய-பீதியினால், முஷித-கவரப்பட்ட, ஹ்ருதய-மனத்தையுடைய, பித்ரு-தகப்பனான சக்ரவர்த்தியின், வசந-ஆஜ்ஞா வசநத்தின், பாலந-ரக்ஷண

விஷயமான, ப்ரதிஜ்ஞா- ப்ரதிஜ்ஞையினால், அவஜ்ஞாத- நிராகரிக்கப்பட்ட, யௌவராஜ்ய- யுவராஜப் பதவியையுடைய ஸ்ரீ ராமபத்ர!

(கரு) கைகேசி இரு வரங்களையும் தரும்படித் தன்னை நிர்பந்திக்கும்போது தசரத சக்ரவர்த்தியின் மனம் செயலற்றுப் போய்விட்டது. வரங்களை நிறைவேற்றினால் தனக்குப் ப்ரியமான ராமபத்ரனைத் தவவேடம் புனையச்செய்து கானகமன்றோ அனுப்பவேண்டிவரும். இதையெப்படிச் செய்யமுடியும்? நினைத்துப்பார்க்கவும் கூசுகின்ற விஷயமன்றோ இது. வரத்தைக்கைவிடில் அஸத்யமல்லவா நம்மைச் சூழுமென்று பயந்த சக்ரவர்த்தியின்மனம் என்ன செய்யவேண்டுமென்பதை யறியமாட்டாது போயிற்று. அப்போது கைகேசியே ராமனைக் கானகம் செல்லும்படி சக்ரவர்த்தி கட்டளையிட்டதாகக் கூறினாள். ராமனும் 'தண்டகாரண்யம் ஏஷோஹம் இதோ கச்சாமி' (யுவராஜப்பதவி ஏற்பதற்காகக் குறிக்கப்பட்ட நான் இப்போதே தண்டகாவனம் செல்வேன்) என்று ப்ரதிஜ்ஞை செய்து தனக்கு யுவராஜப்பதவியில் விருப்பமில்லையென்பதைக் காட்டியருளினான். கெட்ட நெறி சென்றாகிலும் எந்த பதவிக்காக அரசகுமாரர்கள் விழைவார்களோ அப்படிப்பட்ட பதவியை ராமன் துச்சமாக எண்ணிப் பித்ருவாக்ய பரிபாலனத்திற்காகத் துறந்தான் என்பதால் பதவி கிடைக்காததால் ஸ்ரீ ராமனுக்கு மனத்திலோ, வெளியிலோ எவ்விதமான வருத்தக் குறி விகாரம் தோன்றவில்லை என்பது ஸூசிக்கப்படுகிறது. இதனால் ஸ்ரீ ராமபத்ரன் பரமதார்மிகனென்பது குறிக்கப்படுகிறது.

निषादराजसौहृदसूचितसौशील्यसागर!

நிஷாதராஜஸௌஹ்ருதஸூசிதஸௌசீல்யஸாகர!

நிஷாதராஜ- வேடர் தலைவனான குஹன் என்பானுடனேற்பட்ட, ஸௌஹ்ருத- தோழமையினால், ஸூசித- ஸூசிக்கப்பட்ட, ஸௌசீல்ய- ஸௌசீல்யமென்கிற குணவிசேஷத்திற்குஸாகர- இருப்பிடமான ஸ்ரீ ராமபத்ர!

(கரு) பித்ருவாக்யபரிபாலனத்திற்காக ஸ்ரீ ராமபத்ரன் கானகஞ்செல்லப் புறப்பட்டார். மைதிலியும், லக்ஷ்மணனும் துணை செல்கின்றனர். மூவரும் கங்கைக் கரை சேர்ந்தனர். அங்குள்ள ச்ருங்கிபேரபுரத்திற்கு ராஜாவான குஹன் என்ற வேடர் தலைவன் ஸ்ரீ ராமபத்ரனைக் கண்டு பெருமிதத்துடன் எதிர்கொண்டழைத்துத் தோழமையால் கட்டித் தழுவிக் கொள்கிறான். 'ராம! இந்த ச்ருங்கிபேரபுரம் அயோத்திபோல் உமக்குக்குற்றேவல் புரியும். ஆகையால் நீர் இங்கு வஸிக்கலாம்' என்று விண்ணப்பமும் செய்துகொள்ளுகிறான். ஸ்ரீ ராமபத்ரனும் மகிழ்ச்சியுடன் 'குஹனே! பிணியற்ற உன்னை உன் சுற்றத்தாருடன் நான் கண்டேன், இதுவே எனக்கு மெத்த ஸந்தோஷமளிக்கின்றது' என்று மொழிந்து தன் புஜங்களால் குஹனைக் கட்டிக்கொண்டார். இப்படி குஹனை ஸ்ரீ ராமபத்ரன் ஸ்நேஹத்தினால் கட்டிக்கொண்டதால் தன்னிடமுள்ள ஸௌசீல்யமென்ற குணவிசேஷத்தை வெளிப்படுத்தினான். தங்களைக் காட்டிலும் மிகவும் தாழ்ந்தவர்களிடம், குணங்களாலுயர்ந்தவர்கள் தங்கள் பெருமையைப் பாராட்டாமல் நெருங்கிப்பழகுவதே ஸௌசீல்யகுணமாகும். ஸர்வேச்வரனும் சக்ரவர்த்தித் திருமகனுமான ஸ்ரீ ராமபத்ரன் மிகத்தாழ்ந்த வேடசாதியிற் பிறந்த

குஹனோடு ஸ்நேஹத்தினால் கட்டித்தழுவிப்பழகினான் எனில் அவனுடைய ஸௌசீல்யகுணம் ப்ரகாசமாகிறதன்றோ. ஸௌசீல்யகுணமுள்ளவன் இவ்வுலகில் இப்பொழுது யாருளரெனும் கேள்விக்கு இக்ஷ்வாகு குலத்திலுதித்த ஸ்ரீ ராமபத்ரனே என்ற பதில் ஸ்ரீ ராமாயண ஆரம்பத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயினும் ஸ்ரீராமபத்ரனிடமுள்ள அந்தஸௌசீல்ய குணம் குஹன் விஷயத்தில் ப்ரகாசமடைந்தது என்பது இந்த சூர்ணிகையின் கருத்து. ஹீநர்களுடன் தோழமை கூடாதென தர்மசாஸ்த்ரங்கள் விதித்திருக்க தர்மரக்ஷணத்திற்காக அவதரித்த ஸ்ரீ ராமபத்ரன் ஹீனனான குஹனுடன் தோழமை கொண்டது கூடுமோவெனில், ஹீநர்களுடன் தோழமை கூடாது என்ற வசநம் ப்ராஹ்மணர்களைப் பற்றியதால் க்ஷத்ரியகுலத்திலுதித்த ஸ்ரீ ராமபத்ரனுக்கு அது செய்யத் தகுந்ததே. மேலும் காட்டில் வாழும் மக்களுடன் நட்பு பூண்டிருத்தல் அரசர்களுக்கு முக்யமாகக் கூறப்பட்டிருப்பதைக் காண்க. ஸர்வேச்வரன் பக்தியுள்ளவர்களையே விரும்புகிறவனாகையாலே 'ராமஸ்யாத்மஸமஸ்ஸகா' 'தனக்கு ஸமமான ராமன் தோழன்' என்று பேசப்படும் பக்திமானான குஹன் விஷயத்தில் எம்பெருமான் பெருங்காதல் கொண்டு ஸௌசீல்யத்தை வெளியிட்டது சாலப் பொருத்தமானதே.

भरद्वाजशासनपरिगृहीतचित्रकूटगिरिकटकतटरम्यावसथ!

பரத்வாஜசாஸநபரிக்ருஹீதசித்ரகூடகிரிகடகதடரம்யாவஸத!

பரத்வாஜ- பரத்வாஜர் என்ற முனிவருடைய, சாஸந- கட்டளையினால், பரிக்ருஹீத- ஏற்றுக்கொள்ளப்பட்ட, சித்ரகூடகிரி- சித்ரகூடமெனும் மலையின், கடகதட- தாழ்வரை ப்ரதேசமாகிற, ரம்யாவஸத- அழகிய வாஸஸ்தாநத்தையுடைய ஸ்ரீ ராமபத்ர!

(கரு) குஹனிடத்தில் அன்றிரவு தங்கியிருந்த ஸ்ரீ ராமபத்ரன் மறுநாட்காலையில் குஹன் மூலமாக கங்கையைக் கடந்து, கங்கையும் யமுனையும் கலக்குமிடமான ப்ரயாகஸ்தலத்தில் பரத்வாஜமுனிவரின் ஆச்ரமத்திற்குச் சென்று அம்முனிவரைத் தம்பியுடனும், மனைவியுடனும் வணங்குகின்றார். அம்மஹர்ஷியும் ஸ்ரீ ராமபத்ரனை அன்றிரவு தங்கியிருக்கச் செய்து பரம ப்ரீதியுடன் உபசரித்தார். மறுதினம் காலையில் ஸ்ரீ ராமபத்ரனை விசேஷமாக ஆசீர்வதித்து ஸமீபத்திலுள்ள சித்ரகூடமலையில் பர்ணசாலை கட்டிக்கொண்டிருக்கும்படி கட்டளையிட்டார். ஸ்ரீ ராமபத்ரனும் அம்முனி சொல்லியவழிப்படி சிதரகூடமலையை அடைந்தார். அங்கு திவ்யதம்பதிகளான ஸீதாராமர்களின் விஹாரத்திற்கு ஏற்றவகையில் அழகிய பர்ணசாலையை இளையபெருமாளான லக்ஷ்மணன் நிர்மாணித்தார். அந்த பர்ணசாலையை அடைந்து ஸ்ரீ ராமபத்ரன் ஸீதையுடனும், லக்ஷ்மணனோடும் ஸந்தோஷமாக வஸித்து வந்தார். 'சித்ரகூடமநுப்ராப்ய பரத்வாஜஸ்ய சாஸநாத் । ரம்யம் ஆவஸதம் க்ருத்வா ரமமாணா வநே த்ரய: ॥' என்கிற ராமாயணச்லோகம் ஸ்மரிக்கத் தக்கது. பரத்வாஜமுனிவரின் ஆணையினால் அம்மூவரும் சித்ரகூடமலை சேர்ந்து அழகிய பர்ணசாலை நிர்மாணித்துக் காட்டில் சுகமாக வாழ்ந்தனர் என்பது இதன் பொருள்.

(தொடரும்)

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

15-1-56 பூண்டியில் ராத்திரி திருவாராதனம் முடிந்ததும் 9 மணிக்குப் புறப்பட்டு 8 மைல் தூரமுள்ள செங்காட்டுக்கு எழுந்தருளினார். 16-1-56ல் அவ்வூர்வாஸிகள் தசாவதார மண்டபத்தில் பெருமாளை யெழுந்தருளப் பண்ணி யதாசக்தி ஆராதித்தார்கள். அன்று ராத்ரி புறப்பட்டு 7 மைல் தூரமுள்ள ஸ்வர்ண ஸமுத்ரத்திற்கெழுந்தருளினார். (17-1-56ல் மறுபடியும் பூண்டிக்கு எழுந்தருளவேணும் என்று ப்ரார்த்தித்தார்கள். ஏதோ அஸௌகர்யத்தினால் திடீரென்று ஸ்வர்ணஸமுத்திரம் எழுந்தருளினார்.) அவ்வூர்வாஸிகள் குதூஹலமாக தசாவதார மண்டபத்தில் பெருமாளை எழுந்தருளப்பண்ணி ஆராதித்தார்கள். அன்று பெரியதிருமஞ்சனமும் டோலோத்ஸவமும் நடந்தது. அன்று ராத்ரி புறப்பட்டு 12 மைல் தூரமுள்ள நங்கமங்கலமெழுந்தருளினார். அங்கு ஸ்ரீராஜா ஐயங்கார் பூர்ணகும்பத்துடன் ஸ்ரீ அழகியசிங்கரை வரவேற்று 2 தினங்கள் பூர்ணமாக ஆராதித்தார். இதற்கு முன் 15-6-53ல் இவ்விடம் ஸ்ரீ அழகியசிங்கர் 1 நாள் எழுந்தருளியிருந்தார். டோலோத்ஸவமும் நடந்தது. அவ்வூர் கோவிலுக்கெழுந்தருளி மங்களாசாஸனம் நடந்தது. 19-1-56 ராத்ரி புறப்பட்டு 7 மைல் தூரமுள்ள தாமலுக்கெழுந்தருளினார். இதற்கு முன்னதாக 13-6-53ல் இரண்டு நாளெழுந்தருளியிருந்தார். அவ்வூர் ஸ்ரீ அனந்தாசாரியர் முதலியவர்கள் ஸ்ரீ அழகியசிங்கரை உத்ஸாஹத்துடன் வானவேடிச்கைகளுடன் வரவேற்று 20-1-56 அன்று திருமஞ்சனமும் டோலோத்ஸவமும் பண்ணிவைத்து ஸம்பூர்ணமாய் ஆராதித்தார்கள். அன்று ராத்ரி டோலோத்ஸவம் முடிந்ததும் ஸ்ரீ அனந்தாசாரியர் க்ருஹத்திலிருந்து பெருமாளை தங்கப்பல்லக்கில் எழுந்தருளப் பண்ணிகொண்டு வானவேடிக்கைகளுடன் வீதி உத்ஸவமாகிவேறொரு க்ருஹத்தில் பெருமாளைஎழுந்தருளப்பண்ணி பூர்ணமாய் ஆராதித்தார்கள். 21-1-56 ராத்ரி டோலோத்ஸவமானதும் 17 மைல் தூரமுள்ள நீர்வளூருக்கெழுந்தருளினார். அவ்வூர் வாஸிகள் தசாவதார மண்டபத்தில் பெருமாளை யெழுந்தருளப்பண்ணி யதாசக்தி ஆராதித்தார்கள். இதற்குமுன் 8-6-53ல் ஸ்ரீ அழகியசிங்கர் இவ்விடம் 5 நாள் எழுந்தருளியிருந்தார். அன்று ஸாயங்காலம் 4 மணிக்குப் புறப்பட்டு ஆர்யம்பாக்கம் கிராமத்திற்கு எழுந்தருளி கடாக்ஷித்துவிட்டு எழுந்தருளினார். 22-1-56 ராத்ரி 9 மணிக்குப்புறப்பட்டு 14 மைல் தூரமுள்ள தூசிக்கெழுந்தருளினார். அவ்வூர்வாஸிகளும் பெருமாளை வெள்ளிமண்டபத்தில் எழுந்தருளப்பண்ணி யதாசக்தி ஆராதித்தார்கள். ராத்ரி அவ்வூர் கோவிலுக்கெழுந்தருளி மங்களாஶாஸனம் நடந்தது. அன்று ராத்ரி புறப்பட்டு 6 மைல் தூரமுள்ள காஞ்சீபுரம் தூப்புல் ஸ்ரீ தேசிகன்ஸன்னிதிக்கு எழுந்தருளியாயிற்று. அந்த தேசிகன் ஸன்னிதி தர்மகர்த்தாவும் ஊராரும் மிகவும் உத்ஸாஹத்தோடு ஸ்ரீ அழகியசிங்கரை எதிர்கொண்டழைத்தார்கள். ஸ்ரீ தேசிகன் ஸன்னிதியில் பெருமாளை யெழுந்தருளப் பண்ணி திருவாராதனம் நடந்தது. அன்று ஏகாதசி. காலை 7 மணிக்கு சாற்றுமறை தீர்த்தம் ஸ்ரீ சடாரி ஆனதும் ஸமாச்ரயண பரந்யாஸாதிகள் நடந்தன. பிறகு ஸ்ரீ தேசிகன்ஸன்னிதி மங்களாஶாஸனமும் நடந்தது. ஸ்ரீ தேசிகனுக்கு ஸ்ரீ அழகியசிங்கரால் பட்டு பீதாம்பரம் ஸமர்ப்பிக்கப்பட்டது. பிறகு விளச்கொளி எம்பெருமானை மங்களாஶாஸனம் செய்து ஸ்ரீ அழகியசிங்கர் தந்தப்பல்லக்கிலும் பெருமாள் தங்கப்பல்லக்கிலும் எழுந்தருளி வீதி உத்ஸவத்தோடு தேவப்பெருமாள் ஸன்னிதிக்கெழுந்தருளினார். கோவிலாரும் ஸ்ரீ அழகியசிங்கரை பூர்ணகும்பத்துடன் வரவேற்றார்கள். முதலில் ஸ்ரீபெருந்தேவித் தாயாரை மங்களாஶாஸனம் செய்து ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி மலையடிவாரத்தி லெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கரை மங்களாஶாஸனம் செய்து மலையிலிருக்கும் தேவப்பெருமாள் ஸன்னிதிக்

கெழுந்தருளி மங்களாஶாஸனம் செய்தருளினர். பெருமாளுக்கு நீலத்தகடி ஸமர்ப்பிக்கப் பட்டது. யதாக்ரமமாகமரியாதை யானதும் ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனால் கட்டப்பட்ட நூற்றுக்கால் மண்டபத்தைக் கடாக்ஷித்துவிட்டு மாடவீதிப்ரதக்ஷிணமாக ஸ்ரீஸன்னிதிவீதியிலிருக்கும் ஸ்ரீஅஹோபிலமடத்திற்கெழுந்தருளினர். பிறகு இஜ்யாராதனமாகி கோஷ்டி நடந்தது. மறுநாள் 25-1-56 துவாதசி யன்று மடத்தில் ததீயாராதனை நடந்தது. அன்று ராத்ரி பொய்கை பாக்கம் ஸ்ரீகோபாலாசாரியர் தன்னுடைய க்ருஹத்தில் டோலோத்ஸவம் பண்ணிவைத்தார். அன்று ராத்ரி புறப்பட்டு 6 மைல் தூரமுள்ள மாமண்டூருக்கு எழுந்தருளினர். 26-1-56 மாமண்டூரில் ஊர்வாஸிகள் யதாசக்தி ஆராதித்தார்கள். அன்று ராத்ரி புறப்பட்டு 3 மைல் தூரமுள்ள மாத்தூருக்கெழுந்தருளினர். ஊரார்கள் வெள்ளிமண்டபத்தில் பெருமாளை யெழுந்தருளப்பண்ணி யதாசக்தி ஆராதித்தார்கள். அன்று டோலோத்ஸவமும் நடந்தது. அங்கிருந்து புறப்பட்டு 15 மைல் தூரமுள்ள அழிசூரெழுந்தருளினர். அங்கு ஸ்ரீதிருமலாசாரியர் முதலானவர்கள் நன்றாய் ஆராதித்தார்கள், அங்கிருக்கும் ஸ்ரீஸன்னிதியை தங்களுக்கு ஒருபாத்யதையு மில்லாமல் ஸ்ரீஅழகியசிங்கரிடமே ஒப்புவித்துவிட்டார்கள். அங்கிருந்து ராத்ரி புறப்பட்டு 12 மைல் தூரமுள்ள அளத்துறைக்கெழுந்தருளினர். 29-1-56ல் ஊரார்கள் யதாசக்தி ஆராதித்தார்கள். அன்று ராத்ரி 8 மணிக்குப் புறப்பட்டு 10 மைல் தூரமுள்ள உத்திரமேரூருக்கெழுந்தருளினர். ஊரார்கள் உத்ஸாஹத்துடன் வானவேடிக்கைகளுடன் ஸ்ரீஅழகியசிங்கரை வீதிப்ரதக்ஷிணமாக எழுந்தருளப்பண்ணி யதாசக்தி ஆராதித்தார்கள். ஸாயங்காலம் அவ்வூரிலிருக்கும் ஸ்ரீஸன்னிதிக்கெழுந்தருளி மங்களாஶாஸனமாகி அங்கிருக்கும் (ஸ்ரீஅழகியசிங்கரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற) பாடசாலையைக் கடாக்ஷித்துவிட்டு எழுந்தருளினர். 30-1-56 அன்றையதினம் ராத்ரி புறப்பட்டு 4 மைல் தூரமுள்ள நெல்வாய்க்கெழுந்தருளினர். மாமண்டூரில் ஸ்ரீஅழகியசிங்கரெழுந்தருளியிருக்கும்போதே ஊரார்கள் வந்து நெல்வாய்க்கு எழுந்தருளவேணும் என்று ப்ரார்த்தித்தார்கள். அன்று யதாசக்தி பெருமாளை ஆராதித்து ராத்ரி டோலோத்ஸவமும் பண்ணிவைத்தார்கள். அன்று ராத்ரி 31-1-56 புறப்பட்டு 10 மைல் தூரமுள்ள மதுராந்தகமெழுந்தருளினர். ப்ரின்ஸிபால்ஸ்ரீ டி. ராமஸ்வாமி ஐயங்காரும் ஊரார்களும் கல்லார் ஸமீபத்தில் வந்து பூர்ணகும்பத்துடன் ஸ்ரீஅழகியசிங்கரை வரவேற்றார்கள். ஊர்ஸமீபம் வந்ததும் ஸ்ரீரங்கசடகோபநகரில் வஸிக்கும் பாடசாலை அத்யக்ஷர்கள் உபகாரத்துடன் ஸ்ரீஅழகியசிங்கரை வரவேற்றார்கள். பிறகு மடத்திற்கெழுந்தருளினர்.

1-2-56 அன்று அபிகமனம் தீர்த்தம் ஸ்ரீசடாரி ஆனதும் "ஸ்ரீமாலோல வித்வத் ஸதஸ்" உபக்ரமிக்கப்பட்டது. பிறகு ஸ்ரீராமன் ஸன்னிதிக்கெழுந்தருளி மங்களாஶாஸனமாகி கலாசாலையையும் கடாக்ஷித்துவிட்டு ஸ்ரீரங்கசடகோப நகருக்கு எழுந்தருளி கடாக்ஷித்து தேரடியிலிருக்கும் ப்ருந்தாவனத்திலெழுந்தருளியிருக்கும் ஸ்ரீஅழகியசிங்கரை மங்களாஶாஸனம் பண்ணிக்கொண்டு மடத்திற்கெழுந்தருளினர். ஸதஸ்ஸில் ஒவ்வொரு நாளும் ஊரார்கள் ததீயாராதனைப்பண்ணி ஆராதித்தார்கள். 10-2-56 திருநக்ஷத்ரதினத்தன்று காலை ஸேவை சாற்றுமுறை ஸ்ரீபாததீர்த்தமாகி ததீயாராதனையும் நடந்தது. ஸ்ரீப்ரின்ஸிபால் ஸ்வாமி ததீயாராதனத்தை நடத்திவைத்தார். 3 மணிக்கு ஸபை ஆரம்பிக்கப்பட்டு வித்வான்களுக்கு ஸம்பாவனை வழங்கப்பட்டு முடிந்தது. ராத்ரி டோலோத்ஸவமானதும் உள்ளூர்வாஸியான ஸ்ரீராஜா ஐயங்கார் நாளையதினம் தன்க்ருஹத்திற்கெழுந்தருளவேணுமென்று ப்ரார்த்திக்க ஸ்ரீஅழகியசிங்கரும் பெருமாளை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு அடுத்த தெருவிலிருக்கும் ஸ்ரீராஜா ஐயங்காராத்துக்கெழுந்தருளினர். 11-2-56 அன்று ஸ்ரீராஜா ஐயங்கார் யதாசக்தி ஆராதித்தார். ப்ரின்ஸிபால் ஸ்ரீராமஸ்வாமி ஐயங்கார் 12-2-56 அன்று காலேஜிக்கு பெருமாள் எழுந்தருளவேணுமென்று ப்ரார்த்திக்க ஸ்ரீஅழகியசிங்கரும் பெருமாளும் காலேஜில் எழுந்தருளி ததீயாராதனம் நடந்தது.

ஸ்ரீ:

சௌசம்

ஶௌசம் அல்லது பாரிசுத்யம்

முன்னுரை

ஸதாசாரங்களிற் பெரும்பான்மையும் சௌசவிதியை அடிப்படையாகக் கொண்டவையே. ஸ்ம்ருதிகளிலும் ஆஹ்நிகக்ரந்தங்களிலும் கூறப்பட்டும், சான்றோர் அநுஷ்டானங்களில் நடைபெற்றும் வருகிற ஆசாரங்கள் அனைத்தும் காரணங்களை வெளியிடாமல் விதிரூபமாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. மேனாட்டு நாகரிகம் மிகுந்துள்ள இக்காலத்தில் வைதிகசாஸ்திரங்களின் விதிகளுக்கு விமர்சபூர்வமாக விவேகிகள் உணருமாறு காரணங்களை விளக்காவிடில் ப்ரத்யக்ஷ ப்ரமாணவாதிகளான பலர் முக்யமாய் நவ நாகரிகத்தில் ஈடுபட்ட இளைஞர்கள்— அச்சாஸ்திர விதிகளை விச்வஸித்து ஏற்றுக்கொள்ள இணங்கார்கள். வேதாந்த தத்துவங்களில் ஈடுபடுவதற்கு வைதிகஸம்ப்ரதாயங்களிலும் ஆசாரங்களிலும் உள்ளன்புடன் ஊக்கம் உண்டாகவேண்டியது அவசியம். அவ்வாசாரங்களில் நோக்கம் தோன்றுவதற்கு வைதிகஸம்ப்ரதாயத்தில் தொன்று தொட்டு வந்துள்ள பாரிசுத்யமென்னும் சௌசக்ரமத்தில் நல்ல நம்பிக்கை நம் நவநாகரிக ஸஹோதரர்களுக்கு ஏற்படவேண்டும். இக்கொள்கையை மனத்திற்கொண்டே வைதிக ஸம்ப்ரதாயங்களைப் ப்ரசாரப்படுத்துவதற்கான இப்பத்திரிகையில் 'சௌசம்' என்னும் ஸர்வோபயோகமான விஷயத்தைச் சாஸ்த்ரீயமான காரணங்களுடன் விளக்கிக் கூறுவது பொருந்துமென்று எண்ணி எழுதுகிறேன்.

சௌசம் எவருக்கும் இன்றியமையாதது

ஆசாரம், ஆரோக்யம், ஆத்மசக்தி, ஐஹிக-ஆமுஷ்மிக ச்ரேயஸ்ஸுகள் ஆகிய அகில அம்சங்களுக்கும் அடிப்படையான அநேக விஷயங்கள் அடங்கியது சௌசம் என்பது. வைதிகக் கிரந்தங்களிலும் வைத்யசாஸ்திர நூல்களே சௌசமுறைகளை அர்த்தபுஷ்டியுள்ள வகையில் அதிகமாய் விளக்குகின்றன. ஆனால் வைதிக வித்வான்களிற் பலர் ஆயுர்வேதக்ரந்தங்களில் ஆதரவு காட்டுவதும், அவைகூறுவனவற்றைப் பிரமாணமாகக் கொள்வதும் அரிதென்பதை அறிந்து இக்கட்டுரையில் வைத்திய வைதிகப் பிரமாணங்களைச் சீர்தூக்கிக் காட்டியே சௌசவிதியின் விசேஷங்களை விமர்சம் செய்து விவரிக்கிறேன். உள்ளும் புறமும் எப்பொழுதும் சுசியாயிருக்கவேண்டுமென்கிற உபதேசமொழியை உவந்து ஏற்கும் உள்ளம் இப்பத்திரிகையைப் படிக்கும் நண்பர்களுக்கு விசேஷமாயிருக்குமென்பதும் என் துணிபு.

சௌசம் என்கிற சொல்லைக் குறிப்பிடும்போதே வைதிகர்களுக்கு ஜல-மலோத்ஸர்கங்களுக்குப் பிறகு ம்ருத்திகையையும் ஜலமுங் கொண்டு செய்யப்படும் குஹ்யசோதந விஷயமே முதலில் முக்யமாக மனத்தில் தோன்றும். நமது ஆஹ்நிககாரர்களும் யாஜ்ஞவல்க்யாதி ஸ்ம்ருதிகர்த்தா முதலானோரும் 'கந்தலேபக்ஷயகரம் சௌசம் குர்யாததந்த்ரித:' என்றவாறு ஆரம்பித்து இச்செயலைத்தான் முதலில் சௌசம் என்பதாகக் கூறுகிறார்கள். அவ்வாறு 'சௌசம்' 'கந்தலேபக்ஷயகரம் சௌசம் குர்பாதசந்த்ரித:' என்பதற்கு குஹ்யசோதநத்தை ரூடார்த்தமாகக் கொள்வது ஆபாதத்ருஷ்டமான பொருளையன்றி விமர்சபூர்வகமான உண்மைக் கருத்தன்று. இம்மை மறுமைகளுக்கான இனிய ஒழுக்க வழக்கங்களை ஜனஸமூஹத்திற்கு எடுத்துக் காட்டுவதற்காக ஏற்பட்ட தர்மசாஸ்திர வைத்தியசாஸ்திரங்களும் நவநாகரிகர்ளெனப் படுபவரால் இயற்றப்பட்டுள்ள ஆரோக்ய நூல்களும் 'சௌசம்' என்னும் சுத்தி விஷயத்தை மூன்று அல்லது நான்கு வகையாக வகுத்துக் கூறியிருக்கின்றன. புராதந-நூதந முறைகளில் எழுதப்பட்டுள்ள எல்லாச் சிறந்த நூல்களிலும் சௌசம் அல்லது சுத்தம் என்பதற்கான அடிப்படைக் கொள்கைகளும் விதிநியமங்களும் பெரும்பாலும் ஒரே சீராய் அமைந்துள்ளன. இவ்விதிநியமங்களிலிருந்து தவறி நடப்பது தோஷம் (பாபஹேது) என்று ஸநாதந ஆசிரியர்களும், தீங்கிழைக்கும் (அநாரோக்ய ஹேது) என்று ஆதுநிக சாஸ்திரஜ்ஞர்களும் அபிப்பிராயப்

படுகிறார்கள். எவ்விதமாயினும் சௌசக் குறைவு (துராசாரம்) தீங்கிழைப்பதென்று எல்லாச் சாஸ்திரஜ்ஞருடையவும் ஒரே முடிவான கொள்கை

சௌசம் பொதுவாக இரண்டு விதம்

வைதிகாசாரங்களில் முதலில் குறிப்பிடக் கூடியதும், அவ்வாசாரங்களுக்கு மூலாதாரமுமாயுள்ளது சௌசம். இது பாஹ்ய சௌசமென்றும் ஆப்யந்தர சௌசம் என்றும் இரு வகைப்படும். அவற்றுள் பாஹ்ய சௌசமானது தேஹ சௌசம், தேச சௌசம் என்று இரண்டு விதமாம். இவ்விதமே ஆப்யந்தர சௌசமும். ஆப்யந்தர தேஹசௌசம் (உடலின் உட்புற சுத்தி) என்றும் மனச்சுத்தியென்றும் பகுக்கப்படுவதுண்டு. இவ்வகைத்தான வெவ்வேறு சௌசகர்மங்களைப்பற்றி இதனடியில் விவரம் காணலாம். வைதிக ஸம்ப்ரதாயங்களைப் பிரதிபாதிப்பதற்கான தர்மசாஸ்திராதிகளைப் போலவே வைதிகக் கொள்கைகளில் ஈடுபட்ட வைத்தியதந்திரப் பிரவர்த்தகர்களும் சுசியாயிருத்தலின் பெருமையையும், அதனால் மானிடர் அடையக் கூடிய பேறுகளையும் இவ்வாறுபகுத்துப் பகர்ந்திருக்கிறார்கள் —

பஹிரந்தச்ச சுசிநா ஸுகிநா தர்மசாரிணா ।
பவிதவ்யம் நரேணாத்ரசாமுத்ர ச்ரேயஸேஸதா ॥
பாஹ்பாந்தச்சௌச நித்பஸ்ய ஸுகே சாரீர மாநஸே । ஸுகார்த்தா: ஸர்வபூதாநாம் மதா: ஸர்வா: ப்ரவ்ருத்தய: ॥ 'இம்மையிலும் மறுமையிலும் இன்பம் விரும்பும் விவேகியானவன் வெளிப்புற உட்புறங்களில் தூய்மையாய் இருக்கப் பழக வேண்டும்; அதனால் பிணிகளை விலக்கிச் சுகமாய் வாழ வேண்டும்; அவனவனுக்குக் கடமையாயுள்ள தர்மங்களைச் சரிவர நிறைவேற்ற வேண்டும்; இவ்வாறு உடலில் உள்ளும் புறமும் சுசியாயிருப்பவனிடம் நோயும் அணுகாது; மனமும் கெடாது. விதி நியமம் தவறாது நடந்துவரும் மனிதருடைய முயற்சிகள் அனைத்தும் தேஹ மனோ நிலைமைகளின் இன்பத்திற்காகவே ஆகும்' என்பது இவ்விரு ச்லோகங்களின் விரிவான கருத்து. வைதிக மார்க்கங்களின் கருத்துணர்ந்த வைத்யோத்தமரான பாவமிச்ரர் கூறியது இவ்விஷயம். பாஹ்யமான மல மூத்திரங்கள் போன்ற அழுக்குகளை அலம்பிச் சுத்தம் செய்ய ம்ருத்திகையையும் ஜலத்தையும் ஸாதாரணமாய் வைதிகர்கள் உபயோகிக்கிறார்கள். உடலில் சேரும் வியர்வைபோன்ற வேறு மலங்களும் உண்டு. நுண்ணிய கொழுப்பு முதலியது அடங்கிய அவ்வித மலங்களைக் கழுவி சுத்தம் செய்ய சீய்க்காய் அல்லது தசாங்கம் முதலியவற்றையும் வெந்நீர் அல்லது தண்ணீரையும் கூட்டி அலம்புவது உசிதமேயன்றி வெறும் மண்ணும் தண்ணீரும் மாத்திரம் போதா. சீய்க்காய் தசாங்கம் போன்றவை கஷாயரஸமுள்ளவை. எண்ணெய்ப்பசை முதலியவை அடங்கிய எல்லா அழுக்குகளையும் அவை அகற்றும். ஆகவே பாஹ்ய மலங்களைச் சுத்தம் செய்ய ம்ருத்திகை, கஷாயவகைகள், தண்ணீர் முதலியவை தேவையென்றும், மனோதோஷமான காமக்ரோதாதிகளை விலக்கி மனத்தைச் சுத்தம் செய்ய ஸத்வாவலம்பநம் தேவை யென்றும் பின்வரும் வைத்யசாஸ்திர வசநம் கூறுகிறது:—

சௌசம் து த்விவிதம் ப்ரோக்தம் பாஹ்யாப்யந்தர பேதத: । ம்ருத்கஷாயஜலைர்பாஹ்யம் பாவ சுத்யாப்யபாந்தரம் ॥

தேஹ சுத்தி

ஒருவனுடைய நடக்கை நீதி தவறாததாயிருக்கலாம்; மனதும் அஹங்கார-மமகாராதிகளொழிந்து மாசற்றிருக்கலாம். ஆனால் உடலும், உடையும், உணவும் அசுசியாயலங்கோலமாயிருந்து வந்தால் அவன் ஆரோக்ய நிலைமையிழந்து நோய்களுக்கும் உறைவிடமாவதோடு ஜனஸமூஹத்தினிடையே அணுகிப் பழகவொண்ணாத அஸஹ்ய புருடனென்கிற அவச்சொல்லுக்கும் ஆளாவது திண்ணம். இது வைத்திய சாஸ்திரக் கொள்கை மாத்திரமல்ல. வைதிகாசாரங்களில் ஈடுபட்ட மஹா பரமைகாந்திகளும் அங்கீகரித்தவபிப்ராயம். ஸ்ரீ நிகமாந்த தேசிகன் கூறுகிறார்:—

த்விஜராஜாங்க ஸம்ஸ்தோऽபி ஸந்மார்க்க கரவாநபி । விசுத்திரஹித: கச்சித் ந விந்தத்யகலங்கதாம் ॥ இரஸமான சிலேஷையில் தேஹ சுத்

தியின் உயரிய உபயோகத்தை இதைவிட நன்ருக விளக்குவதற்கு வேறு எவரால் ஆகும்? சுத்த ஸர்வாங்கனும், தைல ஸ்நானுதிகளால் ஸம்ஸ்கரிக்கப் பெற்ற கேசாதிகளைப் பெற்றவனும், கத்தரித்துச் செம்மைப் படுத்திய நகங்களையுடையவனும், அக்கழுக்கற்றத் துலக்கமான முகவிகாஸமுள்ளவனும், உடையிலும், வேஷத்திலும் ஒழுங்கானவனுயிருப்பவனையே சான்ருேர் சாலவும் மதிப்பர்' என்று அடியில் வரும் சரகவாக்கியமும் கூறுகிறது:—

'சுசி:. ப்ரஸாதித கேச:, கர்தித நக:, ப்ரஸந்ந முக:, ஸாது வேஷ: ப்ரசம்ஸநீய: ஸாதுபி:'

தேஹத்தைப் பரிசுத்தமாக வைத்துக்கொள்வதும், உடை நடை முதலியவற்றை ஒழுங்காயிருக்கப் பராமரிப்பதும் ஆசார—ஆரோக்யங்களுக்கு மாத்திரமல்ல. மேனியின் மேம்பாட்டிற்கும் காரணமாகின்றன. ஸ்நானுதிகளால் பரிசுத்தமாய், விநயத்திற்கும் ஒழுக்கத்திற்கும் உவந்த உடை வேஷத்துடன் வஸிஷ்டாச்ரமம் செல்லும் திலீபதம்பதிகளை மஹாகவி காளிதாஸன் வர்ணிக்குமிடத்திலும் இவ்வுண்மை சுருங்கவும் விளங்கவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 'காப்யபிக்யா தயோராஸீத் வ்ரஜதோ; சுத்தவேஷ்யோ;' தேஹசௌசம் அல்லது பாரிசுத்யத்தின் நியமங்களும் அந்நியமங்களை நிறைவேற்றுவதாலான அரும்பயன்களும் வைத்திய சாஸ்திர நியமங்களாலும், வைதிகதர்ம முறைகளாலும் கவிசிரோமணிகள் விளக்கிய விலக்ஷணமான நாகரிகக் கொள்கைகளாலும் மனிதவாழ்க்கையின் மாசற்ற நோயற்ற நிலைமைக்கு இன்றியமையாதவை யென்று ஒருமனதாய்த் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

துயிலெழும் வேளை

நம் தேஹாத்ம சுத்தியைக்கோரிப் பிரவ்ருத்தித்துள்ள வைத்திய—வைதிகக் கிரந்தங்கள் எல்லாம் அதிகாலையில் அனைவரும் துயிலெழுந்து தேஹசுத்திக்கான அலுவல்களை நித்யம் நிறைவேற்றுவதுதான் நியமநிஷ்டைகளுக்கும், நிகரில்லா ஆரோக்யத்திற்கும் ஆஸ்பதமாகுமென்று உபதேசிக்கின்றனர்.

'அயநோதநஹேதவே மலாநாம் மநஸச்சாபி சரீரதச்ச ஸத்பி: | அருணேதயகாலத: புரஸ்தாத் சயநோத்தாந முதீரிதம் ஸுகார்த்தம் ||'

மனேதோஷங்களையும், உடலழுக்குகளையும், கழித்துச் சுத்தம் செய்யும் பொருட்டும், ஆரோக்ய ஸுகத்தின் பெருக்கிற்கும் அருணேதயமாவதற்கு முன்பே படுக்கை விட்டு எழுந்திருக்கவேண்டுமென்று அறிவிற் சிறந்த பெரியோர் அறிவித்துள்ளார்' என்பது ஆத்ரேயர் என்னும் ஆயுர்வேதப் பிரவர்த்தகரின் மொழி. மேலும் அடியிற் கூறப்படும் ஆசார்ய வாக்படருடைய வசநம் வைதிக சாஸ்திரத்திற்கான ஆஹ்நிகவிதியினும் கொள்கையில் வேறுபட்டதல்ல:— ப்ராஹ்மே முஹூர்த்த உத்திஷ்டேத் ஸ்வஸ்தோ ரக்ஷார்த்த மாயுஷ: | சரீரசிந்தாம் நிர்வர்த்ய க்ருதசௌசவிதிஸ் தத: || 'ப்ராஹ்ம முஹூர்த்தம் என்கிற வைகறைப் போழ்தில் துயிலெழுந்து, சரீரசிந்தை என்கிற ஜல மலோத்ஸர்ஜநங்களைச் செய்து முறைப்படி சௌசமும் செய்து கொண்டு, பிறகு பகற்பொழுதுக்கான கார்யங்களைச் சுகநிலைமையிலிருப்பவன் பார்மரித்து வருவது ஆயுளபிவ்ருத்திக்கும் ஹேதுவாகும் என்பது அந்த ச்லோகத்தின் பொருள். இத்தேஹசுத்தி விஷயத்தில் ராஜவல்லபர் மலமார்க்கங்களை மாத்திரமல்ல, பாதம் முதலிய அழுக்கு சேரும் அவயவங்களையும் அழுக்கடையும்போதெல்லாமடிக்கடியும் அலம்புவது அவசியம்; அதுதான் சரியான சௌச முறை; இவ்வித சௌசந்தான் அங்கசுத்திக்கு மாத்திரமல்ல, ஆத்மசுத்திக்கும், ஆரோக்யத்திற்கும், ஆயுளின் அபிவ்ருத்திக்கும், மதி மேம்பாடடைவதற்குங்கூட ஆதாரமாகின்றது' என்கிருர். அது பின் வருமாறு:— மேத்யம் பவித்ரமாயுஷ்யமலக்ஷ்மீபாபநாசநம் | பாதயோர் மலமார்காணாம் சௌசாதாந மபீக்ஷ்ணச: || இவசனத்துடன் கீழே குறிக்கப்படும் யாஜ்ஞவல்கருடைய வசனத்தை ஒப்பிட்டுப் பார்ப்பது நலம்:—

தூராதுச்சிஷ்ட விண்மூத்ர: பாதாம்ஸி ச மார்ஜயேத் | ச்ருதி ஸ்ம்ருத்யுதிதம் ஸம்யக் நித்ய மாசார மாசரேத் || இவ்வசனம் காரண—கார்ய பலாதிகளை விவரித்துரைக்கும் வைத்திய சாஸ்திர வசனத்திலுள்ள விஷயத்தை விதி பூர்வகமாகக் கூறுகிறது. மேலும் விஜ்ஞாநேச்வர வியாக்யான ரீதியாகவும், ஆரோக்ய சாஸ்திர ரீதியாகவும் ஊன்றிப் படிப்பவருக்கு இந்த ச்லோகத்தின் முதற் பதமான 'தூராத்' என்கிற சொல் அதிக அர்த்தபுஷ்டி யுள்ளதென்பது புலப்படும்.

(தொடரும்)